UNIVERSITY OF JAFFNA LIBRARY 2006 PERIODICALS DIVISION



விலை சதம் -/25

# காந்தீயம்

**இயக்கங்கள்**

எல்லா சீர்திருத்த இயக்கங்களின் வெற்றியும் அதற்குரிய தொண்டர்களின் தூய்மையையே பொறுத்திருக்கும்.

—மகாத்மாகாந்தி

மலர் 15 { காந்தி நிலையம்—உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 108) 1978 ஏப்ரில்-மே } இதழ் 7-8

# வினோபா காணும் கிராம அமைப்பு

**சமூகம் முழுதும் திரண்டெழுந்து பெரும் அளவில் தியாகமும் தானமும் செய்வதையே நான் பார்க்க விரும்புகிறேன் என்று வினோபாஜீ கூறுகிறார்.**

பயத்தையும் துவேஷத்தையும் ஆசையையும் போல அன்பும் பிறர்க்கு உதவும் மனப்பான்மையையும் மக்கள் சமூகத்தைப் பற்றிக்கொண்டு அதை ஏவிச் செயல்படுத்த முடியுமா? இதை நான் பார்க்க விரும்புகிறேன். உள்ளவர்கள் இல்லாதவர்களுக்குத் தானம் செய்ய வேண்டும்; ஆனால் இது நடக்குமா?

சமயத்தில் ஈடுபாடுள்ளவர்கள், தார்மிகச் சிந்தையுள்ளவர்கள் இதைச் செய்திருக்கிறார்கள். ரம்ஸான் வந்தது என்றால் முசல்மான்கள் கோடிக்கணக்கில் பகல் முழுதும் உணவு கொள்ளாது பட்டினியிருக்கிறார்கள். இது சாதாரண விஷயமல்ல. வட நாட்டின் பண்டரீபுர யாத்திரை என்றால் ஆயிரமாயிரமாக மக்கள் கிளம்பிப் போகிறார்கள். உடல் நலமின்மையாலோ, வேறு காரணத்தினாலோ போக இயலாதவர்கள் தம் ஊரிலுள்ள கோயிலை வலம் வருகிறார்கள். இவ்வளவு பேர் தியாகம் செய்கிறார்கள், தானம் செய்கிறார்கள், பட்டினி கிடக்கிறார்களென்றால் அத்தனை பேருக்கும் அறிவு மழுங்கிப் போயிற்றா? இவ்வாறு சொல்லுகிறவர்ள் தாம் விரும்பும் ஒரு காரியத்தைச் செய்யும்படி பல்லாயிரக் கணக்கான, இலட்சக் கணக்கான மக்களைத் தூண்டிவிடட்டும் பார்க்கலாம். முடியவே முடியாது. இதற்கு மக்கள் மனத்தில் உள்ள நம்பிக்கையை, சிரத்தையை, பக்தியை தூண்டிவிட வேண்டியதாயிருக்கும். சமூகத்திலுள்ள எல்லோரும் ஒரு மனதாகச் சேர்ந்து செய்கையில்தான் எந்தப் புரட்சியும் நடக்கும். சமூகமே திரண்டெழுந்து செய்யும் ஒன்றுதான் புரட்சி எனப்படும்.

## கிராம ஏழ்மை எப்போது தீரும்?

கிராம சக்தியை, கிராம மக்களின் ஆற்றலைத் திரட்டினாலல்லாது மக்களின் ஏழ்மை நீங்காது. மக்கள் படும் துயரம் தீராது. நாட்டைப் பாதுகாக்க முடியாது என்று சொல்லி மக்கள் கருத்தை நல்வழியில் திருப்பிவிடுவதற்கு அதனால் விளையக்கூடிய நிதர்சனமான நன்மைகளை ஒரு புறம் எடுத்துச் சொல்ல வேண்டும். அதைச் செய்யாமையினால் நேரக்கூடிய கஷ்டநஷ்டங்களையும் விவரிக்க வேண்டும்.

நாடு முழுவதிலும் மக்கள் அனைவருக்கும் தானமளிப்பதில் மனம் செல்ல வேண்டும். சுயராஜ்யம் பெற வேண்டுமென்று தோன்றியதும் எல்லோரும் தியாகம் செய்தார்கள்; அவர்கள் எவ்வளவோ பாடுபடவும் கஷ்டநஷ்டங்களுக்கு உள்ளாகவும் நேர்ந்தது. ஆயினும் அது சுயராஜ்யமென்ற லாபக் கருத்தோடு நடத்தப்பட்ட இயக்கமாகும். இதனாலேயே கம்யூனிஸ்டுகள் என்னிடம், ''உங்கள் எண்ணம் தவறு, நிலமுள்ளவர்கள் நல்ல வார்த்தையாகச் சொல்லிக் கேட்டால் கொடுக்க மாட்டார்கள். அவர்களிடமிருந்து பலவந்தமாக நிலத்தைப் பறிப்பது என்று சொல்லுங்கள்; நாங்களெல்லோரும் உங்கள் ஏவலைச் செய்ய இதோ கிளம்புகிறோம். நாங்கள் மட்டுமல்ல, இலட்சம் இலட்சமாக எங்களால் இவ்வேலைக்கு ஆட்களைத் திரட்டவும் முடியும்'' என்று சொல்லுகிறார்கள்.

## மிருகத்தனத்துக்கு மதிப்பில்லை

நான் அவர்களுக்குச் சொல்லுவது உங்களுக்கு மனோதத்துவ சாஸ்திரம் தெரியாது. எனக்கு அது நன்றாகத் தெரியும். மனிதன் மனத்தில் மிருகத்தனம் சிறிது இருந்தாலும், அவன் அதை மதிப்பதில்லை என்பது தெரிவதால் மனிதன் தீய காரியத்தையும் விரும்பாமலேதான் செய்கிறானென்பது தெரிகிறது. கொள்ளைக்காரர்களும் பாபாவிடம் மரியாதை காட்டினார்கள்; தாம் செய்து வரும் காரியம் சரியல்லவென்று அவர்கள் மனமே அவர்களுக்கு இடித்துச் சொல்லுகிறது. ஆகையால் சமூகம் முழுதுமாகச் சேர்ந்து, பெரிய அளவில் அன்பும் தானமும் செய்ய முடியுமென்பதை நாம் நிரூபித்துக் காட்டிவிட்டால் சமுதாயத்தின் பேராற்றல் தானே வெளியாகி இயங்கக் கூடும்.

## சமூகம் முழுதும் சேர்ந்து செயல்படவேண்டும்

எத்தனையோ மகான்கள் அரிய பெரிய செயல்கள் புரிந்திருக்கிறார்கள். ஆனால் இதே வகையில் ஒரு சமூகத்தினாலும் செய்ய முடியும் என்பதை நாம் இனிமேல்தான் காட்ட வேண்டும். இது இப்போது நடக்காதென்று ஆட்சேபம்

(3ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தீயம்

காந்தி நிலையம்
உருத்திரபுரம், [இலங்கை]
தொலைதேசி; 254
(கிளிநொச்சி)
காந்தி ஆண்டு 108
1978 ஏப்ரில் — மே


## ஒரு சொல் வேண்டும்

வினோபா அடிகள் ஒரு புதிய லட்சியத்தை நம்முன் வைத்திருக்கிறார். அந்த லட்சியத்தை ஒரு சொல்லில் குறிப்பிடுகிறார். அதுதான் "சர்வோதயம்" என்ற சொல். இந்த லட்சியத்தை நோக்கி அடிகள் செயல்படுகிறார்.

சைவர்களுக்கு 'நமசிவாய' என்ற சொல்லும், வைணவர்களுக்கு 'நாராயணு' என்ற சொல்லும் எப்படியோ அப்படியே உலகிற்கு 'சர்வோதயம்' என்ற சொல் லட்சியமாக வேண்டும். சர்வோதயத்தில் சத்தியம், அன்பு இவ்விரண்டும் இடம் பெற்றுள்ளன. இது எல்லாருக்கும் ஏற்புடைய சொல்.

'ஒரு சொல் வேண்டும்' என்று பாரதியார் வேண்டினார். உலகத்து மக்களை அமரர்களாக்குவதற்குரிய சொல் வேண்டும் என்று அவர் பராசக்தியை வேண்டினார். அச்சொல் 'சர்வோதயம்' என்று வினோபா அடிகள் இன்று கூறுகிறார். இச்சொல் நம் உள்ளத்தில் இடம் பெறவேண்டும்; நமது செயலில் அது பிரதிபலிக்க வேண்டும்.

உலகில் இரண்டு சொற்கள் வழக்கத்திலிருக்கின்றன. ஒன்று சர்வோதயம்; மற்றொன்று கம்யூனிஸம். இவ்விரண்டும் இரண்டு பெரிய தத்துவங்களைப் பிரதிபலிக்கின்றன.

கம்யூனிஸத்தில் எல்லாருக்கும் வேலை, எல்லாருக்கும் உணவு, உடை என்று சொல்லப்படுகிறது. இதனைப் பெற சத்தியம், அன்பு இவற்றைப் பொருட்படுத்தத் தேவையில்லை என்று கருதப்படுகிறது. இதன் காரணமாக தனி மனிதர் சுதந்திரம் பலியாகிறது.

நாம் சிந்திக்க வேண்டும். மனிதனுக்காக உணவா? உணவுக்காக மனிதனு? மனிதன் தனது சுதந்திரத்தை இழந்துவிட்டால், இந்த உணவால் பயன் என்ன? உணவும் மனித சுதந்தரமும் சீராக இணைய வேண்டும். மனிதனுக்கு உணவு தேவை. இது போல் சுதந்தரம் தேவை.

எல்லாருக்கும் வேலை வாய்ப்பு, எல்லாருக்கும் உணவு, உடை, எல்லாருக்கும் சுதந்தரம் என்று கூறுவது சர்வோதயம். இதைத்தான் ஜனநாயக சமதர்மம் என்றும் அரசியல் மொழியில் கூறுகிறோம். சர்வோதயம் இல்லாது ஜனநாயகமும் இராது, சமதர்மமும் இராது.

இன்று நம் எல்லாருடைய உள்ளத்திலும் 'சர்வோதயம்', 'வையகம் வாழ்க' என்ற சொற்கள் இடம் பெறவேண்டும். உலகத்தின் இதர பகுதிகளில் சமாதானமில்லாத போது நாம் மாத்திரம் சாந்தியாக இருக்க முடியாது. ஆகவே, நாம் 'வையகம் வாழ்க' என்கிறோம். இது தேசியத்திற்கு முரண்பட்டதல்ல. 'தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று நீதியின் சார்பான கோபத்தோடு பாரதி பாடினார். அதையேதான் நீதியின் சார்பான அன்போடு 'வையகம் வாழ்க' என்று வினோபா அடிகள் கூறுகிறார்.

இன்று உலகத்தில் பணம் குவிந்துள்ள இடத்தில் மதிப்பும் மரியாதையும் குவிகிறது. பணத்தின் விஷத்தைத் தணித்து சேவை, அன்பு, தியாகம் இவைகளுக்கு மரியாதை அளிப்பதுதான சர்வோதயம்.

திருக்குறள் தமிழ் மறை; உலக நீதி நூல். அதன் சாரமும் சர்வோதயமே. "பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" என்ற குறள் இதற்குச் சான்று.

பகிர்ந்து அனுபவியுங்கள்; எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று எண்ணுங்கள். இதுதான் பெரியோர் வகுத்த தர்மம். இதுவே சமதர்மம் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

நன்றி: கிராமராஜ்யம்

### புதிய பத்திரிகைகள்

**வெண்ணிலா**

பேனு—நண்பர் சஞ்சிகை

**கிடைக்குமிடம்:**
204, அல்-ஹம்ரு வீதி,
மருதமுனை.

ஈழத்துப் பேனு நண்பர்களை உலகமெங்கும் அறிமுகப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் கிழக்கு மாகாணத்திலிருந்து வெளியிடப்படும் மாத இதழ் இது.

**இளநகை**

திரு. அ. ஐசாக் இன்பராசாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இந்த நகைச்சுவை இதழில் படித்து ரசிக்க பல நகைச் சுவை விடயங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

★ சர்வோதய நற் சமுதாயத்தினை

# காத்திருப்போமா?

காந்தி அடிகளின் வாழ்க்கை வெற்றி இரகசியம் என்ன? உண்மையில் பார்க்கப் போனுல் அடிகளின் வாழ்க்கையில் இரகசியம் என்று எதுவுமே இல்லை. அவரது வாழ்க்கை வெற்றிக்கு இரண்டு அடிப்படைக் காரணங்களைக் கூறலாம்.

ஒன்று, காந்தியடிகள் கடுமையான கட்டுப்பாடுகளாலும் சுயபரிசோதனைகளாலும் சுயசிந்தனையாலும் தன்னை உயர்த்திக் கொண்டு பிறரையும் உயர்த்தினுர். மக்களுக்கு ஒரு தெளிவை, தைரியத்தை, குறிக்கோளைக் கொடுத்தார். மக்கள் புத்துணர்ச்சியையும் புத்தெழுச்சியையும் புதுப் பலத்தையும் பெற்றனர். அவர்களுக்கு வீட்டைவிட, உயிரைவிட, நாடு பெரிதாகத் தெரிந்தது. அத்தகைய ஒரு உள்ள—மன உயர்வை அளித்தார் அடிகளார்.

இரண்டாவது, காந்தியடிகள் மக்களிடையே மக்களுக்காக வாழ்ந்தார். அப்படி வாழும்போது எவ்வித பதவியையும் பலனையும் எதிர்பார்த்து அவர் வாழவில்லை—உழைக்கவில்லை. மக்கள் துயர் துடைக்கத் தயங்கியதில்லை. அவர் அனைவருக்கும் முன் உதாரணமாகத் திகழ்ந்தார். அவரது வாழ்க்கை ஒரு திறந்த புத்தகமாக இருந்தது.

இன்றைய நிலை என்ன? மக்களின் உள்ளங்களை நிறைப்பது எது? கருத்தைக் கவர்வது எது? எத்திக்கு நோக்கி நாம் பயணம் செய்கிறோம்? நமது குறிக்கோள் என்ன? உள்ளத்தை உயர்த்தும் சக்திகள் உள்ளனவா?

ஒழுக்கம், கட்டுப்பாடு, கலை, விஞ்ஞானம், தொழில் நுணுக்கம், ஆன்மீகம், கல்வி, அரசியல் ஆகிய அனைத்தும் மனிதனுக்கு முக்கியம். மனிதன் முழுமையான மனிதனுவதற்கு முக்கியம்.

இவற்றுள் இன்று அரசியல் தான் சர்வவியாபியாக விளங்குகின்றது. ஒரு காலத்தில் கடவுள் தான் சர்வவியாபி, சர்வ வல்லமை படைத்தவர், தவறே செய்யாதவர் எனக் கருதப்பட்டார். ஆனுல் இன்று இவை மூன்றும் தனக்கே யிருப்பதாக ஒவ்வொரு அரசியல் தலைவரும் கருதுவதாகத் தெரிகிறது!

காந்தியடிகள் தனது இயல்புக்கு ஒரு துறவியாகவோ அல்லது திருத்தொண்டராகவோ அல்லது தீர்க்கதரிசியாகவோ நின்றிருக்கலாம். அவர் அப்படிச் செய்யவில்லை. மாறுக அரசியல் என்ற அரவத்தோடு போராடினுர். அவர் போராடியதால் பாம்பு புனிதமாயிற்று! அதிகாரம் மக்கள் தொண்டுக்கான கருவியாயிற்று.

இன்றைய அரசியல் இடைநிலைத் தலைவர்களிடம் சிக்கிக் கொண்டு அல்லல் படுகிறது. எங்கும் அதிகார சடுகுடு ஆட்டம் தீவிரமாக நடக்கிறது. பழி வாங்கும் போக்கு விஷம்போல் பரவியுள்ளது. கொள்கை, குறிக்கோள், நேர்மை, நாணயம் போன்றவையெல்லாம் எங்கோ சென்று ஒளிந்து கொண்டன.

படித்தவர்களும் பதவியிலுள்ளவர்களும் அதிகாரபீடத்தில் யார் அமர்ந்தாலும் அவர்களுக்கு 'ஆமாம்' போடுகிருர்கள். அல்லது தங்கள் நலனைப் பார்த்துக் கொண்டு ஒதுங்கிக் கொள்கின்றனர். வசதியும் செல்வாக்கும் படைத்தவர்கள் தங்கள் வசதியையும் செல்வாக்கையும் மேலும் பெருக்கிக் கொள்ள சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்கிருர்கள். பாமரர்கள் அறியாமையால் அல்லலுற்ற வண்ணம் உள்ளனர். நாடு வேட்டைக் காடாகிறது. தடியெடுத்தவன் தண்டல் காரனுகிறுன். வன்முறை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. நாம் சர்வாதிகாரத்துக்கும் தகுதியில்லை; ஜனநாயகத்துக்கும் தகுதியில்லைபோல் தோன்றுகிறது. இந்த இக்கட்டிலிருந்து விடுபட வழி?

அவதார புருஷருக்காகக் காத்திருப்போமா?

— சாதாரணன்

## வினோபா....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கும் கம்யூனிஸ்டுகளும் தம் தவறை உணருமாறு செய்து காட்ட வேண்டும். பலர் சேர்ந்து ஒரு காரியம் செய்தல், அவர்கள் அதில் ஈடுபடுவதற்கு அவர்களது ஆன்மதத்துவ ஈடுபாடு காரணமாயிருத்தல், நல்ல காரியங்களையும் திரள் திரளாக மக்கள் ஒன்று சேர்ந்து புயலின் வேகத்தில் செய்ய முற்படுதல் என்பது இந்த அணுயுகத்தில் மிகவும் அவசியமாகிவிட்டது. இது நடக்காவிட்டால் வரக்கூடிய பேராபத்தில் மனித இனமே மடிந்து மறைந்து போகலாம். இதிலுள்ள விசேஷம் இதைச் செய்தால் நமக்குப் பெரிய லாபம் இருப்பதும் செய்யாத பொழுது பெரிய நஷ்டம் விளையவிருப்பதும்தான். நல்ல காரியங்களைச் செய்யவும் ஒரு சமூகம் முழுவதும் முன்வரும் என்பதை நாமிப்போது நிதர்சனமாகக் காட்ட வேண்டும். ஆன்மீக ரீதியில் செய்ய வேண்டிய சோதனையை நாம் ஆசிரமத்தில் செய்து வருகிறோம். நாம் இங்கே (பிரம்ம வித்தியா மந்திரத்தில்) நடத்தி வரும் பரிசோதனைகளின் விளைவாக இங்கே ஒரு மீராபாயோ அல்லது முக்தாபாயோ தோன்றினுரென்றுல் அதைக் கண்டு நான் திருப்தியடைய மாட்டேன். இத்தகைய பரிசோதனைகள் இல்லாமலே அவர்கள் முன்பு இராஜஸ்தானிலும் மகாராஷ்டிரத்திலும் தோன்றியிருக்கிருர்கள். அதற்கு 'பிரம்ம வித்திய மந்திர்' தேவையில்லை. தனி மனிதர்கள் மூலமாக இதற்கு முன் எத்தனையோ முறை ஆன்ம தத்துவம் இயங்கி இருப்பது நமக்குத் தெரியும். எனவே அது இங்கே மீண்டும் நடந்தால் போதாது. சமூகம் முழுதும் திரண்டெழுந்து தியாகமும் தானமும் பெரிய அளவில் செய்வதை நான் பார்க்க விரும்புகிறேன்.

— வினோபாஜீ

## அன்பர்கள் தபால்

என்னைத் தேடிவரும் 'காந்தீயம்' இதழைக் கண்டு சுவைக்கும் பாக்கியத்தைப் பெற்றுள்ளேன். அகிம்சா மூர்த்தி அண்ணல் காந்தியின் அருளெனவே கருதுகிறேன்.

இராஜலட்சுமி குமாரவேல்
மெரிகோல்ட் எஸ்டேட், கந்தப்பளை

**நிர்மாணம் செய நித்தமும் உழைப்போம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறி வாழ்வோம்!

காந்தியின் படத்தைமாடிக் கட்டிடச் சுவரில் மாட்டி
ஏந்திவந்ததற்கோர்மாலை இட்டுமே நாளும் சாந்தி
சாந்தியென்றேலமிட்டே தன்மனப்போக்கில் வாழும்
மாந்தரைக் காந்திக்கொள்கைமதிப்பவர் என்னலாமோ ?

கள்ளுண்பார் போதைகொள்வார் காந்தியின் வாரிசென்பார்
அள்ளுவார் பணத்தைநாளும் அறவழிச்செலவு செய்யார்
எள்ளுவார் எளியோர்தம்மை எய்த்து முன்னேறப்பார்ப்பார்
கொள்ளுவார்புலாலை ஆனால் கூறுவார் காந்திக்கொள்கை ?

மேடையில் முழக்கம்செய்வார் மெய்யெலாம்சிலிர்க்கும் ஆனால்
ஆடையில் எளிமைகாட்டார் அனைத்துமே பகட்டாய்ப்பூண்பார்
சோடையா போமேன்என்றே சொகுசுடன் வாழப்பார்ப்பார்
சாடையாய்'வடி'யும் கொள்வார் தான்சிறு காந்தியென்பார் !

அண்ணலாம் காந்தியார்க்கு அழகுதான் விழாவெடுத்தல்
பண்ணலாம் சிலைகள்மேலும் படைக்கலாம் நூல்கள் நன்றே
எண்ணெண்ணைப்புகழ்கள் கொண்ட இவையட்டும் போதாதந்தத்
தண்ணுளத்தாரின் கொள்கை தனைப்பிடித்தொழுகல் வேண்டும்!

உண்ணிடாநோன்பால் பொய்யா உள்ளத்தால் உண்மைவாக்கால்
எண்ணெண்ணுமக்கள்தங்கள் இதயத்தில் உறைந்த காந்தி
அண்ணலை அறப்போர்கண்ட அன்பெனும் வடிவைஎண்ணிக்
கண்ணியக்கடமைசெய்தே காந்தியாய் மாறிவாழ்வோம்!

"தாமரைத்திவான்"

# தொண்டரும் கதிரவனும்

சமுதாயத்திற்குப் பயன்பட வாழ்கிறவர்களில் முக்கியமானவர்கள் தொண்டர்கள். தொண்டர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஓர் அழகான விளக்கம் கொடுத்திருக்கிறார் வினோபா அடிகள். தொண்டர்கள் கதிரவனைப் போல இருக்க வேண்டுமாம்.

கதிரவன், காலம் தவறுவதில்லை; கைம்மாறு கருதுவதில்லை; காத்து நின்று கடமையாற்றத் தயங்குவதில்லை.

ஒரு வீடு அடைத்துக் கிடக்கிறது. கதிரவன் உதயமாகிறான். அதன் கிரணங்கள் என்ன செய்யும்? எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் ஒளி பரப்பும். வீட்டின் மூலை, முடுக்கெல்லாம் நுழைந்து உள்ளே ஒளி பரப்பும். அடைத்திருக்கும் கதவு திறக்கப்படும் வரை, கதவிலேயே காத்து நின்று கதவு திறக்கப்பட்டதும் பளிச்சென உட்சென்று ஒளி வீசும்!

தொண்டரும் அதே போல சேவை மறுக்கப்படும் இடத்தில் கூட காலம் வரும் வரை காத்து நின்று கைம்மாறு கருதாது தொண்டாற்ற வேண்டுமாம். உண்மைத் தொண்டன் அப்படித்தான் நடந்து கொள்வானென்று அடித்துச் சொல்கிறார் வினோபா அடிகள்!

(இத்தகைய தொண்டர்கள் இன்று எம் நாட்டிற்கு ஆயிரம் ஆயிரமாக தேவைப்படுகின்றனர். - ஆசிரியர்)

# முழுமைப் புரட்சிக்கு சமுதாயம் பிரசுராலயம்

லோக்நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயணின் முழுமைப் புரட்சிக் கருத்துக்களை மையமாகக் கொண்டு சமுதாய சீர்திருத்தங்களை வேகமாக மக்கள் ஏற்கும் வகையில் தரமான புத்தகங்களைத் தோற்றுவிக்கவும் அவைகளை வீடு வீடாகக் கொண்டு சென்று கொடுத்து படிக்க வைக்கவும் படித்தவர்களின் வேலையின்மையைப் போக்கவும் சுய முயற்சியை ஊக்குவிக்கவும் தமிழ் நாட்டில் சமுதாயம் பிரசுராலயம் என்னும் நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இது பற்றிய மேலும் விபரங்களை, சமுதாயம் பிரசுராலயம், 29, வைசியர் தெரு, கோயமுத்தூர்-1 என்னும் முகவரியுடன் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.


# சுதேச கைத்தொழிலை ஆதரியுங்கள்

சுவையும் ஊட்டச்சத்துக்களும் நிறைந்த ராட்டை அடையாள அப்பளத்தை உபயோகியுங்கள். தனி உழுத்தம் மாவில் சுத்தமாகத் தயாரிக்கப்பட்டது. விரதகாலங்களில் உபயோகிக்க மிகச் சிறந்தது.

விபரங்களுக்கு

நிர்வாகி

கஸ்தூரிமா நிலையம்

அகில இலங்கை

காந்தி சேவா சங்கம்

தர்மபுரம்

பரந்தன் — வழி


இப்பத்திரிகை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் திரு. சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் விவேகானந்தர் மேடு, கொழும்பு - 13 சங்கர் சன்ஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
இலங்கையில் புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org